**மட்டக்களப்பு மாவட்டத்தின் 17 கமநல சேவைகள் செயற்குழுக்கள் - 2024**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** மட்டக்களப்பு மாவட்டத்தின் 17 கமநல சேவைகள் செயற்குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள் வெளிப்படுத்தப்பட்ட பொருள்மையான கணக்கீட்டுக் கொள்கைகள் உள்ளடங்கலாக 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 154(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் உறுப்புறையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் மற்றும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

**1.2** 2024 ஆம் ஆண்டிற்குரிய மட்டக்களப்பு மாவட்டத்தின் 17 கமநல சேவைக் குழுக்களுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட 17 கணக்காய்வு அறிக்கைகளில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்ததுடன், அதற்கான காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழ் காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக் கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 17 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய காணி, அலுவலகக் கட்டிடம், உரக்களஞ்சியம் மற்றும் விற்பனை நிலையங்கள் போன்றவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களைக் கையேற்று நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அறிவுரைகளின் பிரகாரம் அனைத்து நிலையான சொத்துக்களும் நியாயமான பெறுமதியில் மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 03 கமநல சேவைக் குழுக்களின் 87 எண்ணிக்கையான தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பெறுமதிகளை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | - மேற்படி - |
| (இ) | கொக்கட்டிச்சோலை கமநல சேவைக் குழுவின் கட்டிடம் மற்றும் வீட்டுத்தோட்டம் என்பவற்றின் பெறுமதி ரூபா 4,579,525 மற்றும் வந்தாறுமூலை கமநல சேவைக் குழுவில் மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 176,750 | எதிர்வரும் நிதியாண்டுகளில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அறிவுரைகளின் பிரகாரம் குறித்த சொத்துக்களின் பெறுமதி |

| | | | |
|---|---|---|---|
| | தொகைள் மூலதனமாக்கப்பட்டு சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | மூன்று கமநல அபிவிருத்தி செயற்குழுக்களில் 2016 ஆம் ஆண்டு ரூபா 988,911 தொகைக்கு முடிவுறுத்தப்பட்ட பசுமை இல்லம், இரும்புக்கூடாரம் மற்றும் கட்டுமானம் என்பன கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | பழுகாமம் கமநல சேவைக் குழுவில் மீளாய்வாண்டில் புனரமைப்புச் செய்யப்பட்ட நிலையத்தின் அலுவலகக் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 2,781,193 நிதிநிலமைக்கூற்றில் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டுகளில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் சொத்துக்கள் உரிய முறையில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | வாகரை கமநல சேவைக்குழுவில் ஜப்பானிய உதவித்திட்டத்தின் கீழ் 2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் 11 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய இருசக்கர உழவு இயந்திரக் கடன்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,407,000 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய காலங்களில் பதிவுகளை மேற்கொள்ள நடடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய வருமானங்களை முறையாகப் பதிவு செய்யவும், அவற்றை உரிய நேரத்தில் வசூலிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | கரடியனாறு கமநல சேவைக்குழுவில் நிலையான வைப்புக்களின் நிதியாண்டுக்கான வட்டி வருமானம் ரூபா 72,238 தொகையால் குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானத்தை முறையாகக் கணக்கிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் கணக்குகள் திருத்தப்பட வேண்டும். |
| (ஏ) | ஆயித்தியமலை மற்றும் வாழைச்சேனை கமநல சேவைக் குழுக்கள் மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு மீதான வட்டி வருமானம் ரூபா 873,577 தொகைளினை காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகள் மூலமான காசு உட்பாய்ச்சலாக வகைப்படுத்தியிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டுகளில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பொருத்தமான வகைப்படுத்தலின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | வாழைச்சேனை கமநல சேவைக் குழுவின் மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் ஆரம்ப மீதிக்கும் அதன் முன்னைய ஆண்டின் இறுதி மீதிக்கிடையே ரூபா 483,216 தொகை வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒப்பீடுகளை மேற்கொண்டு, காசுப்பாய்ச்சல் கூற்றினை உரிய முறையில் சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | மண்டபத்தடி கமநல சேவைக்குழுவில் 2024 ஆம் ஆண்டிற்கான காசுப்பாய்சசல் கூற்றில் காசு உட்பாய்ச்சலான நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் ரூபா 701,547 தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | - மேற்படி - | கணக்குகளை முறையாகச் சரிபார்த்துத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | மண்டபத்தடி கமநல சேவைக்குழுவில் மீளாய்வாண்டு காலப்பகுதியில் கடன் பட்டோரிடமிருந்து பெறப்பட்ட ரூபா 4,153,295 தொகை கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட தொகையென்றாகக் காட்டப்படாது நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் வேறு வருமானங்களின் கீழ் காட்டப்பட்டிருந்து. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஔ) | ஆயித்தியமலை கமநல சேவைக் குழுவில் கணக்கில் உள்ள காணியொன்றினை குத்தகைக்கு வழங்கி பெறப்பட்ட ரூபா 1,603,616 குத்தகைப்பணம் நடைமுறைப் பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் நிதியாண்டில் நடைமுறையல்லா பொறுப்பாக பதிவினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான ஆய்வை மேற்கொண்டு, கணக்குகளில் உரிய சீராக்கங்களைச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (∴) | கல்லடி கமநல சேவைக் குழுவிற்கு 2020 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்ற 117 தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் முன்னைய ஆண்டுகளிற்காக ரூபா 533,301 தொகைக்கும் மீளாய்வாண்டிற்காக ரூபா 143,460 தொகைக்கும் பெறுமானத் தேய்வு மேற்கொள்ளபட்டிருக்கவில்லை. | சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்குகளில் சரியான சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | வெல்லாவெளி கமநல சேவைக் குழுவில் மீளாய்வாண்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் ரூபா 231,000 பெறுமதியான 22 TSP இரசாயன உரப்பைகள் அழிவுக்குள்ளான நட்டம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் நிதிக்கூற்றுக் களிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டுகளில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் நட்டத்தினை முறையாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | பழுகாமம் கமநல சேவைக் குழுவில் 2019 ஆம் ஆண்டில் உரமானியக் கணக்கிலிருந்து கமநல வங்கிக் கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்ட ரூபா 600,000 தொகை மீளாய்வாண்டு இறுதிவரை நிதிநிலைமைக் கூற்றுக்களில் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சொத்துக்கள் உரிய முறையில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (fp) | கிரான் கமநல சேவைக் குழுவில் நிலையத்தினால் 02 ஆண்டுகளுக்கு முன்னர் அகற்றப்பட்ட ரூபா 1,150,000 தொகை பெறுமதியான உழவு இயந்திரத்தின் பெறுமதியினை சொத்துக்களிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | முறையான பரீட்சிக்கப்பட்டு, நிதிநிலை அறிக்கைகளைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.2 கணக்காய்வுக்காக எழுத்து மூலமாக சாட்சிகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 கமநல வேவைக் குழுக்களின் கணக்கு விடயங்களுக்கு உரிய கூட்டுமொத்தமான ரூபா 31,951,543 மீதியை உறுதிப்படுதிக் கொளவ்தற்காக | கடன் பட்டோர் பட்டியல்கள், பட்டோலைகள், உறுதிப்படுத்தும் | கணக்கு மீதிகளைச் சரிபார்ப்பதற்காக, கணக்காய்வுக்கு கோரப்பட்ட அனைத்து |

| | | |
|---|---|---|
| கணக்காய்விற்கு கோரப்பட்ட சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுப்படுத்த ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | கடிதங்கள் மற்றும் விரிவான அட்டவணைகள் போன்றவை சமார்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத் துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் | | | |
| | (i) 44 (1) ஆம் பிரிவு | சகல கமநல சேவை அமைப்புக்களினதும் கணக்குகள் ஆணையாளர் நாயகத்தினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட உதியோகத்தரினால் பரீட்சிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்ட போதும் 06 கமநல சேவை அமைப்புக்களின் கணக்குகள் ஏற்பாடுகளின் பிரகாரம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சகல கமநல வேவை அமைப்புக்களினதும் கணக்குகளை பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் அதனை இணங்காத தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) 55 (1) ஆம் பிரிவு | ஆரையம்பதி கமநல சேவைக் குழுவினால் வயல் காணிகளை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் காணிகளை அளப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (M) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 03 கமநல சேவைக் குழுக்களினால் ரூபா 25,000 தொகைக்கு மேற்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக முத்திரை கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முத்திரை கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 102 – 110 | 2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலவரத்தினால் இழப்புக்கு உட்பட்ட ஏறாவூர் கமநல சேவைக் குழுவின் நிலையத்திற்குரிய ரூபா 459,562 ஆன 66 நடைமுறையல்லாச் சொத்து விடயங்கள் தொடர்பாக | எதிர்வரும் நிதியாண்டுகளில் பிரதி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்று பதிவழிப்பதற்கு | நிதிப்பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும், மேலும் அவற்றை மீறும் தரப்பினர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொலிஸ் இல் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தபோதும் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்து பதிவழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | நடவடிக்கை எடுக்கப்படும். | மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | 07 கமநல சேவைக் குழுக்களினால் இழப்பு தொர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இழப்பு தொர்பான பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (iii) | நிதிப்பிரமாணம் 137 மற்றும் 225 | வந்தாறுமூலை கமநல சேவைக் குழுவில் மீளாய்வாண்டில் யூரியாக் கொள்வனவிற்காக ரூபா 1,610,000 தொகை செலவுறுதிச்சீட்டு தயாரிக்கப்படாமலும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் அனுமதிக்கப்படாமலும் உரக் கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகள் நடக்காமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (iv) | நிதிப்பிரமாணம் 384 (2) | வெல்லாவெளி கமநல சேவைக் குழுவினால் காசோலை கையேற்றல் மற்றும் காசோலை வைத்துக் கொள்ளல் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பதிவேட்டை பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (v) | நிதிப்பிரமாணம் 452 (1) - (2) | கொக்கட்டிச்சோலை மற்றும் தாந்தாமலை கமநல சேவைக் குழுக்களினால் கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு மற்றும் மின் பொருத்திகளின் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (vi) | நிதிப்பிரமாணம் 502(2) | காத்தான்குடி மற்றும ஏறாவூர் கமநல கமநல சேவைக் குழுக்களினால் நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் அவை பௌதீகரீதியிலும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (vii) | நிதிப்பிரமாணம் 891 | 15 கமநல சேவைக் குழுக்களினால் பிணைப் பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (viii) | நிதிப்பிரமாணம் இலக்கம் 756 (6) மற்றும் அரசாங்கத்தின் நிதி | 12 கமநல சேவைக் குழுக்களினால் இருப்பு விடயங்களில் வருடாந்த மெய்யாய்வு அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை | எதிர்காலத்தில் வருடாந்த சுற்றாய்வு அறிக்கையினை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கை இலக்கம் 01/2020 | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் | |
| (ஈ) | 2018 ஏப்ரல் 20 ஆம் திகதிய 5/2018 இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றறிக்கை | 10 சகல கமநல சேவைக் குழுக்களால் அவற்றின் அதிகார பிரதேசங்களில் காணப்படுகின்ற மேட்டு நிலங்களின் பெயர் பட்டியலை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேட்டு நிலம், மேட்டுக் காணிகளின் பெயர் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும் பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் அதனை இணங்காத தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை. | 08 கமநல சேவைக் குழுக்களால் கணனிகள் மற்றும் கணினித் துணைப் பாகங்கள் தொடர்பில் பதிவேடுகளைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நான் எதிர்காலத்தில் இந்த ஆவணங்களைப் பராமரிக்கப் நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |
| (ஊ) | 1979 இன் 58 ஆம் இலக்க கமநல சேவைச் சட்டத்தின் கீழான சுற்றறிக்கையின் 107 இன் 15 ஆம் பிரிவு | 05 கமநல சேவைக் குழுக்களினால் பொதுப் பேரேடு மற்றும் நாட்குறிப்புப் பதிவுகள் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பொதுப் பேரேடு மற்றும் நாட்குறிப்புப் பதிவுகளை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (எ) | 2020 யூன் 25 ஆம் திகதிய 08/2020 இலக்க கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் சுற்றறிக்கை | 11 கமநல சேவைக் குழுக்களினால் காசு, களஞ்சியம் மற்றும் காசோலை கையொப்பமிடல், வருமான சேகரிப்பு ஆகிய செயற்பாடுகளுடன் தொடர்புடைய அலுவலர்களிடமிருந்து பிணைப்பணம் பெறப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய அலுவலர்களிடமிருந்து பிணைப்பணம் பெற்றுக்கொள்வதற்கு நடடிக்கை எடுக்கப்படும் | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

(அ) மீளாய்வாண்டில் 17 கமநல சேவைக் குழுக்களின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 878,666 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 27,149,231 ஆகும். இதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 28,027,897 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு விவசாய காணிகளின் ஏக்கர் வரி வருமானம், பசளை விற்பனை மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் வீழ்ச்சி என்பவைகள் பிரதானமான காரணமாக அமைந்திருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் 17 கமநல வங்கிகளின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 948,655 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,523,305 ஆகும். இதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,574,650 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டிருந்தது. இந்த வீழ்ச்சிக்கு விவசாய கடன் வட்டி வருமானம் குறைந்தமை மற்றும் மண்டபத்தடி கமநல வங்கி மற்றும் ஏறாவூர் கமநல வங்கிகளில் இடம்பெற்ற பண மோசடி என்பன பிரதானமான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 12 கமநல சேவைக் குழுக்கள் அமைந்துள்ள காணிகளின் உரித்து கையேற்பதற்கு கமநல சேவைக் குழுக்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் படி நிலத்தைக் கையகப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மண்டபத்தடி கமநல சேவைக் குழுவினால் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,895,000 பெறுமதியன 150 பேக் யூரியா உரம் கணக்காய்வுத் திகதியான 2025 ஜுன் 09 ஆந் திகதி வரை 99% ஆன யூரியா உரங்கள் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 2.8 மில்லியன் பெறுமதியான நிதி முடக்கப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் கமநல அமைப்புகளினூடாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான திட்டத்தைப் பயன்படுத்தி உர விற்பனையை விரைவுபடுத்தி, கையிருப்பை பணமாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மண்டூர் கமநல சேவைக் குழுவில் 02 வங்கிக் கணக்குகளிலுள்ள வைப்புகளின் கூட்டுமொத்தம் ரூபா 220,505 ஆனது 06 தொடக்கம் 19 வருடங்களாக உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது செயல்விளைவற்று காணப்படுகின்றது. | எதிர்காலத்தில் நிதியினை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அனுமதியின் பேரில், அந்த நிதியை சம்பந்தப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வாகரை கமநல சேவைக் குழுவின் வங்கி இணக்ககூற்றுக்களில் கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்டு மாற்றப்படாத 02 காசோலைகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,300,500 தொகை தொடர்பில் 01 தொடக்கம் 05 வருடங்களாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட பிரதி ஆணையாளரின் அனுமதியினைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான விசாரணை நடத்தப்பட்டு, நிதிப் பரமாணங்களின் பிரகாரம் அந்தத் தொகையைத் திரும்பச் செலுத்தவோ அல்லது வருமானக் கணக்கில் வரவு வைக்கவோ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கொக்கட்டிச்சோலை கமநல சேவைக் குழுவில் மீளாய்வாண்டில் கமநல அமைப்பினால் செலுத்தப்பட்ட மற்றும் கொழும்பு கொமர்சல் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கூட்டுமொத்த ரூபா 6,460,725 தொகையினை செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட பிரதி ஆணையாளரின் அனுமதியினைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். | சம்பந்தப்பட்ட நிதிகளை உரிய முறையில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைக |
|---|---|---|---|
| (அ) | மன்டபத்தடி மற்றும் ஏறாவூர் கமநல சேவைக் குழுக்களில் 2022–2025 காலப்பகுதியில், தினமும் சேகரிக்கப்பட்ட பணத்தை விரைவாக வங்கியில் வைப்பதில் நடவடிக்கை எடுக்காததால், ரூபா 10,154,193 பண மோசடி நிகழ்ந்திருந்தது. இது தொடர்பில் நிதிப் பிரமாணம் 104(1)(ஆ) இன்படி, ஆரம்ப விசாரனைகளினை ஆரம்பிப்பதற்கு 2025 மே மாதம் வரை நடவடித்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பணத்தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது மீதி நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து, முறைகேடு குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும், இது தொடர்பாக உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கல்லடி கமநல சேவைக் குழுவில் 2023 ஆம் ஆண்டில் நிர்மாணத் தரப் பரிசோதனைக்காக அனுமதியின்றி வழங்கப்பட்ட ரூபா 420,495 ஊக்குவிப்பு கொடுப்பனவை உரிய உத்தியோகததர்களிடமிருந்து 02 ஆண்டுகளுக்கு மேலாக அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும். | முறையான விசாரணை நடத்தப்பட்டு, மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2009 ஆம் ஆண்டில் காணப்பட்ட சிக்கலான நிலமையின் காரணமாக தாந்தாமலை கமநல சேவைக் குழுவின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 2,086,912 இற்காக பொலிஸ் இல் முறைப்பாடு செய்திருந்த போதிலும் கடந்த 15 வருட காலமாக அதனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களைத் தொடர்புகொண்டு விசாரணையை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | பழுகாமம் கமநல சேவைக் குழுவில் மீளாய்வாண்டில் ரூபா 3,303,500 பெறுமதியான யூரியா இரசாயன பசளைகள் முற்றாக சேதமடைந்திருந்தன. இது குறித்து முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நட்டம் தொடர்பில் உரிய நடவடிக்கைக எடுக்கப்படாமல் சேதமடைந்த இருப்புக்கள் உரிய அனுமதிகள் இன்றி இருப்பு புத்தகங்களில் நீக்கப்பட்டுள்ளது. | உரிய விசாரணைகள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய விசாரணை நடத்தி இழப்புக்குக் காரணமான உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் நீண்டகாலமாக அறவிட வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 31,893,863 பெறுமதியான வருமதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் தொகையை உரிய நேரத்தில் வசூலிக்காத உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் நிலுவையில் உள்ள தொகையை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 06 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் நீண்டகாலமாக சென்மதியாளர்களுக்கு செலுத்தி தீர்க்கப்பட வேண்டிய கூட்டு மொத்தம் ரூபா 5,565,492 இனை கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த தொகையினை மீளளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையில் உள்ள தொகையைச் செலுத்துவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வந்தாறுமூலை கமநல சேவைக் குழுவுக்கு காலநிலைக்கு இசைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தினால் கடந்த 2021-2022 இல் ரூபா 4,564,456 பெறுமதியில் 10 இயந்திரங்கள் வழங்கப்பட்டதிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை வருமானமாக ரூபா 12,000 மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வருமானத்தினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | முறையான திட்டம் ஒன்றின் மூலம் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டில் வந்தாறுமூலை கமநல சேவைக் குழுவிற்கு கிடைக்கப்பெற்ற நெல் விதைக்கும் 02 இயந்திரங்கள் 03 ஆண்டுகளாக செயல்விளைவற்றுக் காணப்படுகிறன. | எதிர்காலத்தில் இயந்திரங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான திட்டத்தினை பயன்படுத்தி இயந்திரங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மண்டபத்தடி கமநல சேவைக் குழுவினால் கமநல வங்கி நடவடிக்கைகளினை ஆரம்பிப்பதற்கு முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 607,200 தொகையினை 05 ஆண்டுகளுக்கு மேலாக மீளப் பெற்றுக் கொள்வதற்கு நிலையத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணமாக வழங்கப்பட்ட பணத்தினை மீளப் பெற நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஊ) | வாகரை கமநல சேவைக் குழுவால் 2022 ஆம் ஆண்டில் 35 கமநல அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட 37 தெளிகருவிகள் குறித்து, 03 ஆண்டுகள் | எதிர்காலத்தில் மேற்பார்வை செய்ய நடவடிக்கை | கருவிகளை பயன்படுத்துகின்றமை தொடர்பில் உரிய |

| | | | |
|---|---|---|---|
| | கடந்தபோதும் அவை பயன்படுத்தப்படுகிறதா மற்றும் வருமானம் ஈட்டப்படுகிறதா என்பது தொடர்பில் நிலையம் மேற்பார்வை நடவடிக்கை எடுக்கவில்லை. | எடுக்கப்படும். | மேற்பார்வை செய்ய நடவடிக்கை எடுத்தல். |
| (எ) | கொக்கட்டிச்சோலை கமநல சேவைக் குழுவில் 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 417,300 பெறுமதியுடைய 401 சேதனைப்பசளைப் பைகள் மீளாய்வாண்டுவரை விற்பனை செய்யப்படாமல் காலாவதியாகி களஞ்சியசாலையில் காணப்படுகின்றது. | சேதனப் பசளைகளினை விவசாயிகள் பயன்படுத்த மறுப்புத் தெரிவித்தமையினால் அவை விற்பனை செய்ய முடியவில்லை. | முறைப்படியான ஆய்வு நடத்தப்பட்டு, கையிருப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | கொக்கட்டிச்சோலை கமநல சேவைக் குழுவில் மீளாய்வாண்டில் நெற்காணி இடாப்பு திருத்தத்திற்காக ரூபா 500 வீதம் விவசாயிகளிடமிருந்து ரூபா 102,000 தொகை அறவிடப்பட்டிருந்தும் விவசாயிகளுக்கான இடாப்பு திருத்தப்பட்டி ருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் இடாப்பினை திருத்தத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திருத்தத்திற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் அதுகுறித்து உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வறுமையிலுள்ள விவசாயிகளின் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நோக்கில் நன்கொடையாகப் பெற்று நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்ட பணம் மற்றும் அதன் வட்டி வருமானத்தை உள்ளடக்கிய ரூபா 2,880,227 தொகை நீண்ட காலமாக 08 கமநல சேவைக் குழுக்களினால் எந்தவொரு புலமைப்பரிசிலும் கையளிக்கப்படாமல் காணப்பட்டிருந்தன. | நிதியினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அனுமதியுடன் நிதியத்தை உரிய நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கல்லடி கமநல சேவைக் குழுவின் பண்ணை தொடர்பான சேமிப்பு, நடைமுறை, வட்டி மற்றும் அனுமதிக் கட்டண வரவுகளான ரூபா 883,498 மீதிகள் தொடர்பாக மூன்று ஆண்டுகளுக்கு மேலாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | - மேற்படி - | முறையான அனுமதியின் அதைத் திறம்படச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | பசுமை வீட்டுத் தோட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 412,000 வீதம் ரூபா 1,236,000 தொகை 03 கமநல சேவைக் குழுக்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்நிதியேற்பாட்டில் ரூபா 517,475 பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | வருமானம் உழைப்பதற்கு முடியுமான பிரகாரம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியினை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களுவாஞ்சிக்குடி கமநல சேவைக் குழுவினால் மீளாய்வாண்டில் கமநல வங்கிச் செயற்பாட்டிற்காக ரூபா 229,161 பெறுமதியுடைய பிரின்ரர் மற்றும் ஸ்கேனர் என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதிலும், அவை 2025 யூன் 13 ஆம் திகதி வரை குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டும். | சொத்துக்களை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது 12 கமநல சேவைக் குழுக்களுக்கு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் ரூபா 4,009,037 நிதியேற்பாடு ஒதுக்கி பசுமை வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அவை பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணபட்டது. | செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் மற்றும் வருமானத்தை உழைப்பதற்கு முடியாமல் இருந்தது. | பசுமை இல்லங்களைப் பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும், உரிய நடவடிக்கைகளை எடுக்காத தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கரடியனாறு கமநல அபிவிருத்தி செயற்குழுவில் பெறுதியில் நிர்மாணிக்கப்பட்ட விற்பனை நிலைய கட்டிட தொகுதியினை மீளாய்வாண்டு வரை அக் குறிப்பிட்ட நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | கமநல வங்கியின் செயற்பாட்டினை கணனிமயப்படுத்தும் நோக்கத்திற்காக 05 கமநல வங்கிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கூட்டுமொத்தமாக ரூபா 1,140,426 பெறுமதியான கணனி இயந்திரங்கள் வழங்கப்பட்டு ஒரு வருடம் நிறைவடைந்தும் அவ் உபகரணங்களை பயன்படுத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

### 3.6 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் 15 கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் பிரதான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் பெறுகை திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதான பெறுகை திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வந்தாறுமூலை கமநல சேவைக் குழுவில் அரச பெறுகைகள் வழிகாட்டுதல்களின் பிரகாரம் பெறுகை நடைமுறைகள் மற்றும் விலைமனு கோரும் செயன்முறைகள் பின்பற்றப்படாமல் 66 பெறுகை | எதிர்காலத்தில் அரச பெறுகைகள் வழிகாட்டுதல்களின் பிரகாரம் பெறுகை | பெறுகை வழிகாட்டிக் கோவையின பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளின் கூட்டுமொத்தம் ரூபா 9,398,119 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | நடைமுறைகள் பின்பற்றிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ) மற்றும் (ஆ) வழிகாட்டிகளை பின்பற்றாமல் ரூபா 1,930,000 பெறுமதியில் 100 யூரியா பைகள் கொள்வனவு செய்யப்பட்டன. அவற்றில் ரூபா 1,428,200 பெறுமதியுடைய 74 பைகள் மீளாய்வாண்டு இறுதிவரை விற்பனை செய்யப்படவோ அல்லது வழங்குநருக்கு திருப்பியனுப்பப்படவோ நடவடிக்கை எடுக்கப்படாமையினால் 2025 மார்ச் மாதத்தில் காலாவதியானது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் காலங்களில் பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் கொள்வனவு மேற்கொள்ள அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | முறையான விசாரணை நடத்தப்பட்டு, பெறுகையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 03 கமநல சேகைக் குழுக்களால் மீளாய்வாண்டில் கூட்டுமொத்தமாக ரூபா 5,364,760 கொள்வனவு பெறுகைகள் நடைமுறைகள் பின்பற்றப்படாமல் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 கமநல அபிவிருத்தி செயற்குழுக்களில் 5 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக கடமையாற்றும் 25 உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது மாவட்ட அலுவலகத்தினால் இடமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | இடமாற்ற நடைமுறையினை முறையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிலைபெறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் நிலையேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 17 கமநல சேவைக் குழுக்களினால் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டில் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**5. கமநல வங்கி**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 07 கமநல வங்கிகளினால் மீளாய்வாண்டிலும் கடந்த ஆண்டுகளிலும், விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகைகளுக்கு இடையே 251 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 15,119,108 ஆன நிலுவைக் கடன், வட்டி மற்றும் தண்டப் பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய நேரத்தில் தங்களது கடன்களை வசூலிக்காத தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்கவும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கடன்களை மீட்கவும் வழிமுறைகள் கையாளப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஒக்தோபர் 22 ஆந் திகதிய இலக்கம் 7/12/5/4 என்ற கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம், வெளி நிறுவனங்களில் அமுல்படுத்தப்படுகின்ற விவசாய அமைப்புக்களின் நிதியம், கமநல வங்கியில் வைப்புச் செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தபோதும் விவசாய அமைப்புக்களில் காணப்படுகின்ற வங்கி மீதிகள் 17 கமநல வங்கிகளில் வைப்புச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கமநல அமைப்புக்களுக்கு அறிவித்தல் மேற்கொண்டு நிதியத்தை கமநல வங்கிகளில் வைப்பு செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடிதத்தின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுவதற்கு வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2012 பெப்ரவரி 29 ஆம் திகதி 4/2012 (க.வ) சுற்றறிக்கையின் பிரிவு 4.3 படி, கமநல வங்கியில் நாளாந்த காசுக் கையிருப்பு அதிகபட்சம் ரூபா 10,000 அல்லது உதவி ஆணையாளர் அனுமதியுடன் ரூபா 25,000 பேணப்பட வேண்டும். இருப்பினும், வெல்லாவெளி கமநல வங்கியில் நாளாந்த பெறுவனவுகளை வைப்பிடுவதில் உரிய நடவடிக்கை எடுக்காததால், நாளாந்த காசுக் கையிருப்பு ரூபா 25,000 முதல் ரூபா 440,000 வரை அதிகரித்திருந்தது. | எதிர்வரும் ஆண்டுகளில் பணச் சேகரிப்புக்களை நாளாந்தம் வைப்பிலிட நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2012 பெப்ரவரி 29 திகதிய 04/2012 (க.வ) சுற்றறிக்கையின் 3.2(iii) படி, விவசாயிகள் பெறும் கடனில் குறைந்தது 10% கமநல வங்கியின் சேமிப்பு இருப்பது அவசியம். இருப்பினும், களுவாஞ்சிக்குடி கமநல சேவைக் குழுவில் 10% சேமிப்பு இல்லாத 33 விவசாயிகளுக்கு, மீளாய்வாண்டில் தலா ரூபா 60,000 வீதம், மொத்தம் ரூபா 1,980,000 விவசாய கடன் வழங்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சுற்றிக்கையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |